24.06.2025

OS No: 564/2019

வா.சா. 2 திரு. கருப்பையா, த/பெ. பெரிய கருப்பன்

**<u>1 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் 2வது வாதி என்றால் சரிதான். தாவா வழக்கு எதற்காக போட்டுள்ளேன் என்றால் முத்தையா கோவில் எங்களது கோவில் என வழக்கு போட்டுள்ளேன். எங்களது கோவில் என்றால் யாரை குறிக்கும் என்றால் காத்தான்பேரன் வகையறா, முத்தன் மகன் காத்தான் வகையறா , கோடங்கி வகையறா, பெரிய கருப்பன் மகன் முத்துக்கருப்பன் வகையறா ஆகியோரை குறிக்கும். தாவா வழக்கில் மேற்சொன்ன 4 வகையறாவிற்கு முத்தையா கோவில் சொந்தம் என சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்சொன்ன 4 வகையறாவிற்கு மட்டும் குலதெய்வம் என்றும் மற்ற வகையறாகளுக்கு குலதெய்வம் அல்ல என்றால் சரிதான். ஊத்திக்குளத்தை சேர்ந்த மக்களுக்கும் முத்தையா கோவில் மக்களுக்கும் சம்பந்தம் கிடையதா என்றால் சம்பந்தம் கிடையாது. ஊத்திக்குளத்தை சேர்ந்த மற்றவர்கள் மேற்படி கோவிலுக்கு வந்து சாமி கும்பிடுவார்களா என்றால் சாமி கும்பிடுவார்கள். நாங்கள் தான் மேற்படி கோவிலுக்கு வகையறா என்பதற்கு என்ன வகையான வழிபாடு செய்கிறோம் என்றால் முன்னோர்கள் வழிப்பட்டது போல் நாங்களும் தேங்காய் பழம் வைத்து சாமி கும்பிடுவோம். குழந்தைக்கு மொட்டை அடித்து காது குத்துவோம் என்றும் அருள் இறக்கி எங்களுக்கு சாமி வரும் என்றும் சொல்லியுள்ளது சரிதானா என்றால் சரிதான். மதுரையில் உள்ள பாண்டிக்கோவிலுக்கு தென்தமிழகத்தில் உள்ள மக்கள் வந்து மொட்டை அடித்து காதுக்குத்தி கிடாவெட்டி சாமி கும்பிடுவார்கள் என்றால் சரிதான். மேற்படி சாமி கும்பிடும் அனைவருக்கு அது குலதெய்வம் அல்ல என்றால் சரிதான். அதை போல் நாங்களும் முத்தையா கோவிலில் கிடா வெட்டி சாமி கும்பிடுவோம் என்றால் சரிதான். சர்வே எண். 418/3 நிலமான யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் மீனாட்சி பெயரில் பட்டா உள்ளது. முத்தையா

கோவில் அமைத்துள்ள இடத்தின் சர்வே எண். என்ன என்றால் 419/1 ஆகும். சர்வே எண். 419/1 அரசு வருவாய் ஆவணங்களில் என்னவாக வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் அரசு புறம்போக்கு என்று வகைப்படுத்தப்பட்டது. சர்வே எண். 419/1 இடத்திற்கு நான் குறிப்பிட்ட 4 வகையறா நபர்கள் பெயரில் பட்டா ஏதும் இல்லை என்றால் சரிதான். சர்வே எண். 419/1 சர்வே எண். 419 லிருந்து உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண். 419/2 யாருடைய பெயரில் உள்ளது என்றால் தெரியாது. சர்வே எண். 419/2 பிரதிவாதிகள் வகையறாவான குலையர் வகையறாவை சார்ந்தது என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண். 419/2 பிரதிவாதிகள் வகையறா பெயரில் உள்ளது என்றும் அதை நான் மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா கோவில் ஆதியில் கூரைக்கூடமாக இருந்தது என்றால் சரிதான். அது எப்போது ஓட்டுக்கூடமாக மாற்றப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. கூரைக்கூடமாக இருந்த இடத்தை ஓட்டுக்கூடமாக பிரதிவாதிகள் தான் மாற்றினார்கள் என்றால் இல்லை. தாவா கோவில் திருவிழாவிற்கு நன்கொடை வசூலித்தாக என்று சொல்வது சரியல்ல என்றால் நன்கொடை வசூலித்துள்ளோம். நன்கொடை வசூல் செய்தது குறித்து நோட்டில் எழுதி 4 வகையறா ஆட்களும் கையெழுத்து செய்து மேற்படி ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா எ ன்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். UDR காலத்தில் தாவா சொத்து யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் தெரியாது. தற்போதும் மேற்படி கோவிலில் திருவிழா காலத்தில் சாமி கும்பிட்டு வருகிறோமா என்றால் 2019 வருடம் வழக்கு தாக்கல் செய்ததற்கு பிறகு திருவிழா எதுவும் நடத்தவில்லை. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் WP(MD)No.375/2018 வழக்கு தாக்கல் செய்து அதில் உத்தரவு பிறப்பிக்கப்ட்டதா என்றால் எங்களுக்கு ஆதரவாக பிறப்பிக்கப்பட்டது. மேற்படி உத்தரவு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை எங்களிடம் உள்ளது. எனது நிரூபண வாக்குமூல சங்கதிகள் வழக்கறிஞருக்கு நான் சொல்லி தான் டைப் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஏன் தாவா வழக்கு கோவில் குறித்து

பிரச்சினை எழுத்தது என்றால் பிரதிவாதிகள் தாவா கோவிலை தங்களுக்கு சொந்தமானது என்று சொன்னதால் பிரச்சினை எழுந்தது. நான் எந்த வகையறாவை சேர்ந்தவர் என்றால் கோடாங்கி வகையறாவை சேர்ந்தவர். தாவா கோவிலை ஆதி யில் காத்தான் வகையறா பூசை செய்து வந்தார்கள் என்றால் சரிதான். ஆதியில் தாவா கோவிலுக்கு பூசாரியை நியமித்தது குலையர் வகையறா என்றால் சரிதான். மஞ்சுவிரட்டு கூட்டம் நடைப்பெறும் இடத்தில் தான் தாவா முத்தையா கோவில் உள்ளது என்றால் சரியல்ல. ஊத்தி குளத்தில் உள்ள மாரியம்மன் கோவிலுக்கு கள்ளிப்பட்டி கிராமத்தார் வந்து சாமி கும்பிடுவார்களா என்றால் இல்லை. ஒரு பங்காளிக்கு ஒரு குலதெய்வம் என்றால் சரிதான். நாங்கள் 4 பங்காளிகள் ஆவோம் என்றால் சரிதான். 4 பங்காளிகளுக்கு ஒரு குலதெய்வம் இருக்கமுடியாது என்றால் சரியல்ல. சாட்சி முத்து கருப்பன் எந்த வகையறா என்றால் காத்தான்பேரன் வகையறா சேர்ந்தவர். முத்துக்கருப்பனுக்கு வாரிசு இல்லை. புது கண்மாய் கரையில் சூலாயுதம் வைத்து முனிஸ்வரர் வைத்து கும்பிடுகிறார்கள் என்றும் மேற்படி கோவில்களுக்கு கட்டந்தி வகையறா பூஜை செய்வார்கள் என்றால் சரிதான். முனிஸ்வரர் கோவிலுக்கு அருகில் உள்ள இடங்கள் பிரதிவாதிகளுக்கு பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். தாவா முத்தையா கோவில் பிரதிவாதிகளுக்கு சொந்தமான இடத்தில் இருந்தது என்றால் சரியல்ல. சர்வே எண் 419/1 கோவிலுக்கு என்றும் சர்வே எண் 419/2 பிரதிவாதிகள் வகையறாவிற்கு என்றும் UDR போது பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். எங்களுக்கு ஊத்திக்குளம் பகுதியில் எங்கு நிலம் உள்ளது என்றால் காளியம்மன் கோவிலுக்கு முன்னால் உள்ளது அந்த இடம் புஞ்சை நிலம் ஆகும். மேற்படி புஞ்சை இடமானது யார் பெயரில் உள்ளது என்றால் எனது பெயரிலும் மற்றும் என்னுடைய மனைவி பெயரிலும் உள்ளது. மேற்படி சொந்து யாரிடம் வாங்கப்பட்டது என்றால் பூர்வீகம் சொத்தாகும். பூர்வீகத்தில் யார் பெயரில் இருந்தது என்றால் என்னுடைய ஆயா பெயரில் இருந்தது. மேற்படி இடமான கள்ளிப்பட்டியை சேர்ந்தது என்றால் சரியல்ல ஊத்திக்குளத்தை

சேர்ந்தது. நான் ஊத்திக்குளத்தின் பூர்வீககுடி அல்ல என்பதால் தாவா கோவில் எங்களுக்கு பாத்தியம் என சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா கோவிலானது பிரதிவாதிகளுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட இடத்தில் அமைத்து உள்ளது என்றும் அதில் காத்தான் வகையறாவே பூஜை செய்ய பிரதிவாதிகள் நியமித்தார்கள் என்றால் சரியல்ல. காத்தான் வகையறா வாரிசுதாரர்கள் தற்போது இல்லாமல் போனதால் நாங்கள் மேற்படி கோவிலுக்கு பூஜை செய்து சொந்தம் கொண்டாடியதால் பிரச்சினை ஏற்ப்பட்டது என்றால் சரியல்ல. தாவா கோவிலுக்கும் வாதிகளுக்கும் சம்பந்தமில்லை என்றும் அது எங்களுடைய குலதெய்வம் கோவில் அல்ல என்றால் சரியல்ல. தாவா கோவிலை உருவாக்கியது பிரதிவாதிகள் என்றால் சரியல்ல.

R Pandy Digitally signed by R Pandy Date: 2025.06.24 17:53:58 +0530